தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4032, Homebush NSW 2140

www.tsch.org.au **homebushtsch@gmail.com**

அரையாண்டுப் பரீட்சை 2026

ஆண்டு: 10 திகதி: 13.06.2026

நேரம்: 2:00 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள்

ஆசிரியர்கள்: திருமதி புவனேஸ்வரி புருஷோத்தமர்
திரு ஜனார்த்தன் குமரகுருபரன்

மாணவர் பெயர்: ....

வினாக்கள்	**வினா புள்ளி**	**பெற்ற புள்ளி**
வினா 1	18	
வினா 2	25	
வினா 3	15	
வினா 4	20	
வினா 5	10	
வினா 6	12	
மொத்தப் புள்ளிகள்	**100**	

வினா இல	1	புள்ளிகள்	18	பக்கம்	2

கீழ்வரும் உரைப்பகுதியை வாசித்தபின் கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

தமிழ் மொழியினுடைய மிகப் பழைய இலக்கண நூல்களில் ஒன்று தொல்காப்பியம். இதன் ஆசிரியர் தொல்காப்பியர். இவர் அகத்தியரின் மாணாக்கர் என்பர். அகத்தியர் தந்தது அகத்தியம் என்னும் இலக்கண நூலாகும். தொல்காப்பியம் கி.மு 2-ஆம் நூற்றாண்டுக்கு முன்பே தோன்றியிருக்கலாம் என்று நம்புகிறார்கள்.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகரங்களைக் கொண்டது. தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் பழந்தமிழர்களின் வாழ்வியலை விளக்குகின்றது.

பழந்தமிழர்கள் உயிரியல் பற்றிச் சிறப்பாக அறிந்திருந்தனர் என்பதற்கு தொல்காப்பியரின் உயிரியல் பாகுபாடு எடுத்துக்காட்டாக அமைகிறது. தொல்காப்பியர் உயிரினங்களை ஆறுவகையாகப் பிரித்துக் கூறியுள்ளார். ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர் என ஆறாக வகுத்துள்ளார்.

தொடுதல் உணர்வை மட்டும் கொண்டவை ஓரறிவு உயிர்கள். மரம், புல் போன்றவை இதில் அடங்கும். தொடுதலுடன் சுவைத்தல் உணர்வையும் உடையவை ஈரறிவு உயிர்கள். தொடுதல், சுவைத்தல், மணத்தல் என்ற மூன்று உணர்வுடையவை மூவறிவுயிர்கள் ஆகும். தொடுதல், சுவைத்தல், மணத்தலோடு பார்த்தலும் கொண்டவை நான்கறிவு உயிர்கள் ஆகும். நண்டு, தும்பி இதில் அடங்கும். ஐந்தறிவு உயிர்கள், நான்கு அறிவோடு கேட்டல் திறனும் கொண்டவை. விலங்குகளும் பறவைகளும் ஐந்தறிவு உயிர்களாகும். ஐந்தறிவோடு மனம் ஒன்றுபட்டுச் சிந்திக்கும் அறிவையும் உடையவர்கள் மனிதர். மனிதர்கள் ஆறறிவு படைத்தவர்கள் ஆவர்.

1. பந்தியில் குறிப்பிடப்பட்ட இலக்கண நூல்கள் எவை? அவை யாரால் எழுதப்பட்டன? (4 புள்ளிகள்)

_____

_____

_____

_____

2. தொல்காப்பியம் எத்தனை அதிகாரங்களைக் கொண்டது? அவை எவை? (2 புள்ளிகள்)

_____

_____

3. பழந்தமிழர் வாழ்வியலைப் பற்றித் தொல்காப்பியத்தில் எங்கே அறியலாம்? (1 புள்ளி)

_____

4. பழந்தமிழர் உயிரியல் பற்றிய அறிவு கொண்டிருந்தனர் என்பதற்குச் சான்று என்ன? (2 புள்ளிகள்)

_____

_____

5. உயிரினங்களைத் தொல்காப்பியர் எத்தனை வகையாகப் பிரித்துக் கூறியுள்ளார்? (1 புள்ளி)

_____

_____

6. ஈரறிவு உயிர்கள் எத்தகைய உணர்வுகளைக் கொண்டவை? (2 புள்ளிகள்)

_____

_____

7. மூன்று அறிவு கொண்ட உயிர்கள் இரண்டு எழுதுங்கள்? (2 புள்ளிகள்)

_____

_____

8. விலங்குகளும் பறவைகளும் எந்தக் கூட்டத்தில் அடங்கும்? (1 புள்ளி)

_____

_____

9. மனிதர்களுக்குரிய ஆறு அறிவுகளும் எவையென இங்கு அறிந்தீர்கள்? (3 புள்ளிகள்)

_____

_____

வினா இல	2	புள்ளிகள்	25	பக்கம்	4

கீழே உள்ள உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

எங்கள் தாய் மொழியான தமிழ் மொழி உலகின் முதன் மொழி என்று ஆய்வாளர்கள் நிறுவுகிறார்கள். உலகின் மூத்த மொழிகளின் வரிசையில் தமிழுக்குச் சிறப்பிடம் உண்டு. காலப்போக்கில் வழக்கிழந்து போன மூத்த மொழிகள் சிலவுள. ஆனால் தமிழ் மொழி இன்றும் வழக்கில் உள்ள உயிர்த்துடிப்புள்ள இளமைமிக்க செம்மொழியாகத் திகழ்கிறது.

சங்க காலம் முதல் அதாவது இன்றைக்கு (2500) இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பே இலக்கிய இலக்கண செழுமையோடு வாழ்ந்த தமிழ்மொழி இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழ்மொழி சங்கப் புலவர்களாலும், அரசர்களாலும் போற்றிப் பேணி வளர்க்கப்பட்டது என்பதை நமது சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பவை சங்க காலத்தில் சங்கப் புலவர்களால் பாடப்பட்டவை. அக்காலத்தில் இருந்து இன்று வரை கால மாறுபாடுகளுக்கும் அரசு மாற்றங்களுக்கும் அந்நிய படையெடுப்புகளுக்கும் சமயச் சண்டைகள் சச்சரவுகளுக்கும் மத்தியில் நமது தமிழ் அகப்பட்டாலும் எல்லாச் சவால்களுக்கும் வளைந்து கொடுத்து எல்லோரையும் தன்பால் ஈர்த்து அவர்களையும் வளர்த்துத் தானும் மிக உறுதியாக நிலை பெற்று நிற்கிறது.

சங்கப் புலவர்களான கபிலர், பரணர், நக்கீரர், கணியன் பூங்குன்றனார், ஔவையார், முடத்தாமக்கண்ணியார், காக்கை பாடினியார் போன்ற புலவர்களால் பாடப்பட்ட தமிழ், காதலையும் வீரத்தையும் போற்றியது. அடுத்து வந்த காலத்தில் நீதி நெறிகளை வகுத்துக் கூறியது. உலகப் பொதுமறை திருக்குறளைத் தந்தது. அடுத்த காலத்தில் பக்தி மொழியாகப் பரிணமித்தது. சோழர் காலத்தில் காப்பியத் தமிழாகச் சிறந்தது. பெருந்தொகையான இலக்கியங்களை அதாவது பெருங்காப்பியங்கள், சிறு காப்பியங்கள், கம்பராமாயணம், மூவருலா, நந்திக் கலம்பகம், நளவெண்பா, கலிங்கத்துப்பரணி என்று பல தோன்றின.
அடுத்து பிறமொழிச் செல்வாக்கும் பிற மன்னர்களின் ஆட்சியும் தமிழுக்கு நலிவைத் தந்தாலும் தத்துவத் தமிழாக சிலேடைத் தமிழாகப் புது வடிவம் பெற்றது. அத்துடன் செய்யுள் வடிவத்திலே அதிகம் புனையப்பெற்ற தமிழ், உரைநடை வளர்ச்சியும் பெற்று ஐரோப்பியராண்ட காலத்தில் நாவல், சிறுகதை, புதுக்கவிதை என வளர்ந்தது. இத்தோடு தமிழர் வாழ்விட அடித்தளம் அசைக்கப்பட, புலம்பெயர் வாழ்வு அதிகரித்தது. புலம்பெயர் மண்ணிலும் தமிழ் காலூன்றிப் புனைவுகளும் எழுத்தாளர்களும் மலர்ந்து கணினி யுகத்திலும் காலூன்ற வைத்தனர்.

தமிழ் செம்மொழித் தகுதி பெற்ற மூத்த மொழியானாலும் இன்றும் இளமையான மொழியாக வளம் நிறைந்த மொழியாகத் திகழ்கின்றது. இவ்விடத்தில் பாரதியார், பாரதிதாசன், திரு விக போன்றோர் நவீன தமிழுக்கு வழிகாட்டிகள் என்று கூறும் அதே வேளையில் இளங்கோவடிகள், கம்பர், காளமேகப் புலவர் ஆகியோரையும் நாம் போற்றுகின்றோம். குழந்தைக் கவிஞர்களான தேசிய *விநாயகம்பிள்ளை*, நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, சோமசுந்தரப் புலவர், வித்துவான் வேந்தனார், கவிஞர் அம்பி ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

புலம்பெயர் நாடுகளில் தமிழ் மொழி வார இறுதி நாட்களில் நடைபெறும் சமூக அமைப்புப் பாடசாலைகளில் கற்பிக்கப்படுகிறது. அதனால் தமிழின் தொன்மையும் செழுமையும் வளமையும் இளமையும் பேணப்படுகின்றது. பாரதியார் எண்ணியபடி உலகமெங்கும் தமிழ் முழக்கம் செழித்துள்ளது. தமிழ்மொழியும் தமிழர்

கலாச்சாரமும் புலம்பெயர் தமிழர்களால் முன்னெடுக்கப்படுகின்றது. இதனால் தேமதுரத் தமிழோசை உலகமெலாம் கேட்கின்றது. இளையோர் தமிழ் மொழியை *கற்கவும்* பேணவும் வளர்க்கவும் களம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

1. தமிழ் மொழியின் சிறப்புகள் மூன்று கூறுங்கள்? (3 புள்ளிகள்)

_____

_____

_____

2. சங்க காலத்தில் பாடப்பட்ட நூல்கள் எவை? (2 புள்ளிகள்)

_____

_____

_____

3. தமிழ் எத்தகைய சாவால்களைச் சந்தித்துள்ளது? (3 புள்ளிகள்)

_____

_____

_____

4. சங்கப் புலவர்கள் பெயர் ஐந்து எழுதுங்கள் (3 புள்ளிகள்)

_____

_____

_____

5. எந்தக் காலத்தைச் சேர்ந்த புலவர்கள் காதலையும் வீரத்தையும் போற்றிப் பாடினர்? (1 புள்ளி)

_____

_____

6. காப்பியத் தமிழ் என்று தமிழ் மொழி போற்றப்பட்ட காலம் எது? (1 புள்ளி)

_____

_____

7. சோழர் காலத்தில் எழுந்த இலக்கியங்கள் எவை? (3 புள்ளிகள்)

_____

_____

_____

8. ஐரோப்பிய ஆட்சிக் காலத்தில் தமிழ்மொழி கண்ட புது வளர்ச்சிகள் எவை? (3 புள்ளிகள்)

_____

_____

_____

9. குழந்தைக் கவிஞர்கள் என்று பந்தியில் குறிப்பிடப்பட்டோர் யாவர்? (2 புள்ளிகள்)

_____

_____

_____

10. புலம்பெயர் நாடுகளில் தமிழ் பேணப்படுகிறது என்பதை ஏற்றுக் கொள்ளுகிறீரா? பந்தியிலிருந்து ஆதாரம் தருக. (4 புள்ளிகள்)

_____

_____

_____

வினா இல	3	புள்ளிகள்	15	பக்கம்	7

கடிதம் எழுதுதல்.

உமது தமிழ்ப் பாடசாலையில் இவ்வருடம் நடைபெற்ற கலை விழா, "தமிழ் மொழியையும் தமிழ்க் கலாச்சாரத்தையும் சிறப்பித்துக் காட்டியது; அவுஸ்திரேலியாவில் தமிழ் வாழ்கிறது என்பதை நிரூபித்தது" இக்கூற்றை விளக்கி அதற்கான நிகழ்ச்சிகளை ஆதாரமாகக் கூறி உமது நண்பனுக்கு 120 சொற்களில் கடிதம் எழுதுங்கள்.

வினா இல	4	புள்ளிகள்	20	பக்கம்	9

கட்டுரை எழுதுதல்.

பின்வருவனவற்றில் ஒன்றைத் தெரிந்து 200 சொற்களில் எழுதுங்கள்.

1. "தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம் "என்ற தலைப்பில் உமது பாடசாலைப் பரிசளிப்பு விழாவில் நீர் ஆற்ற இருக்கும் பேச்சினை எழுதுக.
2. சென்ற கோடைகால விடுமுறையின் போது குடும்பத்துடன் நீர் சென்ற விடுமுறைச் சுற்றுலாவில் கண்ட புதுமைகள், அனுபவித்த சவால்கள், சுவைத்த உணவுகள், நினைவில் நிற்கும் காட்சிகள் ஆகியவற்றை விவரித்து மூன்று நாள்களுக்கான தினக்குறிப்பை எழுதுக.
3. தமிழ் பேசும் நாடு ஒன்றில் வெளியாகும் பத்திரிகையில் பிரசுரிக்க, "அவுஸ்திரேலியாவில் எமது வாழ்க்கை முறைகளும் இங்கு வாழ்வதில் உள்ள நன்மைகளும் சவால்களும்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

வினா இல	5	புள்ளிகள்	10	பக்கம்	11

கேட்டுக் கிரகித்தல் -1

	இங்கே குறிப்பெடுக்கவும்
1. பந்தியில் குறிப்பிடப்பட்ட நூலின் பெயர் என்ன (1 புள்ளி)	
2. அந்த நூலை எழுதியவர் யார்? (1 புள்ளி)	
3. யாழ் எப்படிப்பட்ட இசைக்கருவி ஆகும்? (2 புள்ளிகள்)	
4. இந்த நூலில் நூலாசிரியர எவற்றை விளக்கிக் கூறுகிறார்? (4 புள்ளிகள்)	
5. இந்த நூலுக்கு முதல் நூலாக இருந்த காப்பியம் எது? (2 புள்ளிகள்)	

வினா இல	6	புள்ளிகள்	12	பக்கம்	12

கேட்டுக் கிரகித்தல் -2

	இங்கே குறிப்பெடுக்கவும்
1. தாயகத்தில் உள்ள தீவுகளில் பெரிய தீவு எது என்று அறிந்தீர்? (1 புள்ளி)	
2. இத்தீவுக்கு இந்தப் பெயர் ஏன் உண்டானது? (2 புள்ளிகள்)	
3. இத்தீவினுடைய வளங்கள் எவை? (4 புள்ளிகள்)	
4. இத்தீவில் இருந்து பாலும், பால் உற்பத்திப் பொருட்களும் முன்பு எங்கு எடுத்து செல்லப்பட்டன? (3 புள்ளிகள்)	
5. இத்தீவில் கோட்டை ஒன்றைக் கட்டியவர்கள் யார்? (2 புள்ளிகள்)	